


**17. 10. 2025**

<u>தலைப்பு செய்திகள்</u>

1. பிரதமர் திரு.நரேந்திரமோடி "தடையற்ற பாரதத்தின் ஆற்றல்" தொடர்பான உலகளாவிய உச்சிமாநாட்டில் இன்றுஇரவு புதுதில்லியில் உரையாற்றுகிறார்.

2. நாட்டின் விமான படையின் தற்சார்பு திறனை, நவீன போர் விமானங்கள் பறைசாற்றுவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

3. தமிழ்நாட்டில் ஆணவ கொலைகளை தடுக்க தனிச்சட்டம் இயற்றப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் சட்டப்பேரவையில் கூறியுள்ளார்.

4. கோல்ட்ரிஃப் மருந்து விவகாரத்தில் அரசு விரைந்து நடவடிக்கை எடுத்ததால் உயிரிழப்புகள் தடுக்கப்பட்டதாக மாநில அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் சட்டப்பேரவையில் குறிப்பிட்டுள்ளார்.

5. ராமநாதபுரம் விருதுநகர் தூத்துக்குடி தென்காசி நெல்லை கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<u>இனி விரிவான செய்திகள்</u>

***********

<u>பிரதமர்</u>

புதுதில்லி பாரத் மண்டபத்தில் "தடையற்ற பாரதத்தின் தற்போதைய ஆற்றல்" என்ற தலைப்பிலான உலகளாவிய உச்சிமாநாட்டில் பிரதமர் திரு.நரேந்திரமோடி இன்று உரையாற்றுகிறார்.

இலங்கை பிரதமர் டாக்டர் ஹரிணி அமர சூர்யாவை புதுதில்லியில் இன்று சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தைகளையும் பிரதமர் மேற்கொள்கிறார்.

மேலும் இந்தியா வந்துள்ள எகிப்து வெளியுறவு அமைச்சர், டாக்டர் பத்ர் அப்டலேட்டியையும், பிரதமர் சந்தித்து பேசுகிறார்.

***********

ராஜ்நாத் சிங்

நாட்டின் விமான படை தற்சார்பு திறனை, சுகோய், தேஜஸ், **HTT – 40** ரக போர் விமானங்கள் பறைசாற்றுவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

மஹாராஷ்டிர மாநிலம் நாஸிக் உற்பத்தி பிரிவில் தயாரிக்கப்பட்ட, முதல் தேஜஸ் இலகு ரக போர் விமானத்தை, இன்று நாட்டிற்கு அர்ப்பணித்து பேசிய அவர், அதி நவீன போர் விமானங்கள், நாஸிக் உற்பத்தி பிரிவில் தயாரிக்கப்படுவது குறித்து பெருமதம் வெளியிட்டார்.

பெங்களூரு, இந்துஸ்தான் ஏரோ நாட்டிக் விமான உற்பத்தி பிரிவின் இரண்டு அலகுகளில், ஆண்டொன்றுக்கு 16 ஜெட் விமானங்கள் தயாரிக்கப்படும் நிலையில், நாஸிக்கில் தேஜஸ் இலகு ரக விமானம் உருவாக்கப்படுவது குறித்து அமைச்சர் பெருமிதம் வெளியிட்டார்.

150 கோடி ரூபாய்க்கும் அதிகமான செலவினத்தில் இந்த உற்பத்தி மையம் உருவாக்கப்பட்டிருப்பதாக எடுத்துரைத்த அவர், இதன்மூலம் ஆண்டொன்றுக்கு கூடுதலாக மேலும் 8 ஜெட் விமானங்கள் உற்பத்தி செய்யப்படும் என்றார்.

இதனால் இந்துஸ்தான் ஏரோநாட்டிக் உற்பத்தி நிறுவனத்தின் வருடாந்திர திறன் 24-ஆக அதிகரிக்கும் என்றார்.

இந்நிகழ்வின் ஒருபகுதியாக **HTT-40** ரக பயிற்சி விமானத்தின் இரண்டாவது உற்பத்தி பிரிவையும் அவர் தொடங்கிவைத்தார்.

***********

ஜோதிர் ஆதித்ய சிந்தியா

தொலைதொடர்பு சேவை மற்றும் உற்பத்தி பிரிவுகளில் உலகளாவிய முன்னோடி நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று மத்திய தொலைதொடர்புத்துறை அமைச்சர் திரு.ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், 4-ஜி அலைக்கற்றை திறனுடைய 5ஆவது நாடாக நம்நாடு திகழ்கிறது என்றார்.

3 ஆவது மிகப்பெரிய மின்னணு நாடாக உயர்ந்துள்ள இந்தியாவில், 1.2 பில்லியன் கைபேசி சந்தாதாரர்கள் உள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

இதேபோல் இணையதளம் அகண்ட அலைவரிசை சேவை பயன்படுத்துவோரின் எண்ணிக்கையும் பெருமளவு அதிகரித்துள்ளதாக கூறினார்.

நாட்டின் 260 கோடி **UPI** பணபரிவர்த்தனைகளின் மூலம் 4 ட்ரில்லியன் டாலர் பண பரிமாற்றம் ஒவ்வொரு ஆண்டும் நிகழ்வதாக குறிப்பிட்டார்.

வரும் ஜனவரி மாதம் 24 விரைவு தபால் சேவைகளை அரசு தொடங்க உள்ளதாகவும் எடுத்துரைத்தார்.

***********

ஜே.பி.நட்டா

நாட்டில் சாலை விபத்துகளில் உயிரிழப்புகள் மற்றும் காயங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகளில் மத்திய அரசு உறுதியுடன் செயலாற்றி வருவதாக மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

"சர்வதேச விபத்து காயங்கள் தினத்தை" ஒட்டி, அமைச்சர் இன்று வெளியிட்டுள்ள செய்தியில் அவசர நிலைகளின்போது துரித சிகிச்சை குறித்த விழிப்புணர்வின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

விபத்து, தீக்காயம் மேலாண்மை போன்ற தேசிய திட்டங்களின் கீழ் அவசர சிகிச்சைக்கான மையங்களை நாடுமுழுவதும் ஏற்படுத்துவதில் மத்திய அரசு முனைப்புடன் இருப்பதாக குறிப்பிட்டார்.

"விபத்து காய சிகிச்சைக்கான முன்னேற்பாடுகளுடன் பாதுகாப்பான எதிர்காலத்தை கட்டமைப்போம்" என்ற கருப்பொருளுடன் இந்தாண்டு இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.

***********

பீஹார்

பீஹாரில் 121 சட்டப்பேரவை தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 6 ஆம் தேதி நடைபெறும் முதற்கட்ட வாக்குப்பதிவிற்கான வேட்புமனு தாக்கல் இன்று நிறைவடைகிறது.

இரண்டாம் கட்டமாக 122 தொகுதிகளுக்கு அடுத்த மாதம் 11ஆம் தேதி நடைபெறும் தேர்தலுக்கான மனு தாக்கல் வரும் திங்கட்கிழமை நிறைவடைகிறது.

***********

நெல்லை

பாரத் கௌரவ் சிறப்பு சுற்றுலா ரயில் திருநெல்வேலியிலிருந்து அடுத்த மாதம் 9ம் தேதி முதல் இயக்கப்படுவதாக **IRCTC** தென்னக பொதுமேலாளர் திரு.ராமலிங்கபாசு தெரிவிக்கிறார்.

- - - வாய்ஸ். –

- ***********

முதலமைச்சர்

தமிழ்நாட்டில் ஆணவ கொலைகளை தடுக்க தனி சட்டம் இயற்றப்படும் என்று முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று இதனை தெரிவித்த அவர், இதற்காக ஓய்வுபெற்ற நீதிபதி கே.என்.பாஷா தலைமையில் ஆணையம் அமைக்கப்படும் என்றார்.

சட்ட வல்லுநர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், பாதிக்கப்பட்ட அனைத்து தரப்பு மக்கள், அரசியல் கட்சி தலைவர்களை கலந்தாலோசித்து இந்த ஆணையம் அரசுக்கு உரிய பரிந்துறையை வழங்கும் என்றார்.

***********

<u>சுப்பிரமணியன்</u>

கோல்ட்ரி.ஃ.ப் மருந்து விவகாரத்தில் தமிழக அரசு விரைந்து நடவடிக்கை எடுத்ததாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் இதுதொடர்பான கவனஈர்ப்புக்கு இன்று பதில் அளித்த அமைச்சர், அக்டோபர் 1 ஆம் தேதி கோல்ட்ரி.ஃ.ப் மருந்து பாதிப்பு சம்பவம் குறித்த தகவல் கிடைக்கப்பெற்ற உடனேயே இம்மருந்து நிறுவனம் ஆய்வுக்குட்படுத்தப்பட்டதாக எடுத்துரைத்தார்.

ஆய்வில் முறைகேடுகள் இருந்தது கண்டறியப்பட்டவுடன், மத்திய பிரதேசம், ஒடிஷா மாநிலம், உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களுக்கு இது குறித்து எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக அவர் கூறினார்.

தமிழக அரசின் துரித நடவடிக்கையால் பல மாநிலங்களில் உயிரிழப்பு தடுக்கப்பட்டதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

கோல்ட்ரி.ஃ.ப் மருந்து நிறுவனத்திற்கு முந்தைய அஇஅதிமுக ஆட்சியில் தான் உரிமம் வழங்கப்பட்டதாக கூறினார்.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மருத்துவ நிறுவனங்களில் ஆய்வு நடத்தப்படும் என்று கூறிய அமைச்சர், மருத்துவர் ஆலோசனையின்றி மருந்துகள் வாங்குவதை மக்கள் தவிர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

***********

<u>கவன ஈர்ப்பு</u>

வடகிழக்கு பருவமழை காரணமாக நெல் மூட்டைகள் பாதிக்கப்படக்கூடும் என்று, டெல்டா மாவட்ட விவசாயிகள் அச்சப்பட தேவையில்லை என்று, மாநில உணவுத்துறை அமைச்சர் திரு.சக்கரபாணி தெரிவித்தார்.

சட்டப்பேரவையில் இதுதொடர்பாக எதிர்கட்சி தலைவர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி கொண்டு வந்த கவன ஈர்ப்பிற்கு பதில் அளித்த அமைச்சர் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தேங்கியுள்ள நெல் மூட்டைகள், உடனுக்குடன் கொள்முதல் செய்யப்பட்டு, ரயில்வே வேகன்மூலம் வெளி மாவட்டங்களுக்கு அனுப்பபடுவதாக எடுத்துரைத்தார்.

தேவையான இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுவதாக கூறிய அவர், இரவு 8 மணிவரை கொள்முதல் பணிகள் நடைபெறுவதாக குறிப்பிட்டார்.

நாள்தோறும் ஆயிரம் மூட்டைக்கு மேல் நெல் கொள்முதல் செய்யப்படுவதாகவும், தேவையான நெல் கிடங்குகள் உள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

25க்கும் மேற்பட்ட இடங்களில் திறந்தவெளி கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளதாகவும், 8 லட்சம் மெட்ரிக் டன் நெல் மூட்டைகள் வைக்க தேவையான கிடங்குகள் கட்டப்பட்டுள்ளதாகவும் திரு.சக்கரபாணி எடுத்துரைத்தார்.

வாய்ஸ்

***********

<u>தங்கம் தென்னரசு</u>

தமிழ்நாடு, கடும் நிதி நெருக்கடியின் இடையேயும் இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை எட்டியுள்ளதாக மாநில நிதியமைச்சர் திரு.தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் கூடுதல் செலவினங்களுக்கான மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு இன்று பதில் அளித்து பேசிய அமைச்சர், 4 ஆயிரம் கோடி ரூபாய் நிதி மாநில அரசுக்கு வழங்க வேண்டிய நிலையில் மத்திய அரசு 450 கோடி ரூபாய் நிதியை மட்டுமே விடுவித்துள்ளதாக குறிப்பிட்டார்.

மாநில அரசின் நிதியை கொண்டே மத்திய அரசின் திட்டங்கள் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருவதாக கூறினார்.

***********

<u>சட்டப்பேரவை கேள்வி நேரம்</u>

சென்னை நெம்மேலியில் கடல்நீரை குடிநீராக்கும் திட்டம், நான்காயிரம் கோடி ரூபாய் செலவில், முழுவீச்சில் நடைபெறுவதாக மாநில நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது இன்று இதனை தெரிவித்த அவர், இதன்மூலம் வரும் பிப்ரவரி மாதம் 15ம் தேதிக்குள் நாளொன்றுக்கு 200 மில்லியன் லிட்டர் குடிநீர் கிடைக்க, நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

பல்லாவரம், தாம்பரம், மாங்காடு, பூந்தமல்லி உள்ளிட்ட நகராட்சிகளுக்கு போதுமான குடிநீர் வசதி இதன்மூலம் செய்து தரப்படும் என்றார்.

தர்மபுரி, பெரம்பலூர், குள்ளங்கோடு, மொடக்குறிச்சி, போன்ற இடங்களில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டித்தரப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

-----

ஆரணியில் புதிய சுற்றுலா மாளிகை வரும் நிதியாண்டில் கட்டப்படும் என்று, மாநில பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு தெரிவித்தார்.

-----

திருவாரூரில் இயங்கி வரும் இசைப்பள்ளியை இசைக்கல்லூரியாக தரம் உயர்த்த, நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் கூறினார்.

***********

<u>வானிலை</u>

தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில் ராமநாதபுரம் விருதுநகர் தூத்துக்குடி தென்காசி நெல்லை கன்னியாகுமரி மாவட்டங்களில் இன்று மிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மயிலாடுதுறை தஞ்சை திருவாரூர் புதுக்கோட்டை நாகை சிவகங்கை மதுரை திண்டுக்கல் தேனி திருப்பூர் ஈரோடு நீலகிரி கோவை மாவட்டங்களில் இன்று கன மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

***********

<u>சண்முகாநதி</u>

தேனி மாவட்டம் சண்முகா நதி அணை, இன்று முழுகொள்ளளவை எட்டியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

- - - வாய்ஸ் - -

- ***********

<u>நீலகிரி</u>

நீலகிரியில் வனவிலங்குகளுக்கு இடையூறு இல்லாமல் தீபாவளியை கொண்டாடுமாறு, மாவட்ட வன அலுவலர் கௌதம் அறிவுறுத்தியுள்ளார்.

- - வாய்ஸ் - -

- ***********

<u>பேட்மிண்டன்</u>

டென்மார்க் ஓப்பன் பேட்மிண்டன் ஆடவர் ஒற்றையர் காலிறுதியில் இந்தியாவின் லக்ஷயா சென் - ஃபிரான்சின் **Alex** -ஐ இன்று எதிர்கொள்கிறார்.

ஆடவர் இரட்டையர் காலிறுதியில் இந்தியாவின் ரான்கிரெட்டி, சிராக்ஷெட்டி இணை - இந்தோனேசிய இணையை இன்று எதிர்கொள்கிறது.

***********